பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 23 வெள்ளிக்கிழமை 06.02.2026 | அதிர்வு 189


## கெஹலியவின் மூத்த மகள் கைது!

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மூத்த மகள் சமித்ரி ரம்புக்வெல இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று கைதுசெ ய்யப்பட்டுள்ளார்.

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மாகாண சபையை முடக்காதே! தேர்தலை உடனடியாக நடத்து!!

### அதிகாரங்களை முழுமையாக வழங்கு; மக்களாட்சியை உறுதி செய் என்று அநுர அரசிடம் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு வலியுறுத்து



மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அரசு உடனடியாக நடத்த வேண்டும் எனவும், மாகாண சபைகளுக்கென அரசியல் யாப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையாகவும் முழுமையாகவும் வழங்கி, மக்களாட்சியைக் கொண்டவையாக அவை செயற்படுவதற்கு வேண்டியனவற்றை அரசு மேற் கொள்ள வேண்டும் எனவும் தமிழர் சமூக ஜன நாயகக் கட்சி பகிரங்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தமிழர் சமூக ஜன நாயகக் கட்சியின் மத்திய குழு மேற்கொண் டுள்ள தீர்மானம் அறிக்கையாக வெளியிடப்பட் டுள்ளது.

02▶

# பெருந்தோட்டக் கம்பனிகளின் ‘விளையாட்டு’ உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்!

### அரசிடம் மனோ அணி கோரிக்கை

CLICK HERE VIDEO

"சம்பள உயர்வு வருவதற்கு முன்னரே பெருந்தோட்டக் கம்பனிகள் விளையாட்டை ஆரம்பித்துள்ளன. இந்த விளை யாட்டை அரசு கட்டுப்படுத்த வேண்டும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது மனோ எம்.பி. தெரிவித்த கருத்துக்களைக் காணொளியில் பார்வையிட முடியும்.



# மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவன் ஒருவர் பரிதாபப் பலி



(கி.வசந்தன்)

வவுனியா - வாரிக்குட்டியூர் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் மோட்டர் சைக்கிளில் நேற்று இரண்டு மாணவர்கள் பயணித்த போது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஒரு மாணவன் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் கரிஸ்ணன் (வயது 16) என்ற மாணவனே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கெண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாகாண சபைகளை...

இந்த அறிக்கையை தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் வை.விக்கினேஸ்வரன் (தோழர் கிருபா) சார்பில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜாப்பெருமாள் வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி வந்த இலங்கை அரசு ஒவ்வொன்றும் இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தாமல் காலம் கடத்தி வந்திருகின்றன. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் காலம் தள்ளிக் கொண்டே போவது, அந்தந்த மாகாண மக்களின் அடிப்படை உரிமையை நிராகரிப்பதாகும்.

2017ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் (திருத்த) சட்டமானது நடைமுறைப்படுத்த முடியாத சட்டமாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது.

நடைமுறைப்படுத்த முடியாத சட்டமொன்றைக் காரணம் காட்டி மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் காலத்தை தள்ளிச் செல்வது ஜனநாயக விரோதமானதாகும்.

இப்போது ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தி அரசு மாகாண சபைத் தேர்தல்களை தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நடத்துவதாகக் கூறியே இலங்கைவாழ் சிறுபான்மைத் தேசிய இன மக்களின் ஆதரவை அமோகமாகப் பெற்று ஆட்சி அமைத்தார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்த நாள் தொட்டு ஜனாதிபதி உட்பட அரச அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஆள்மாறி ஆள் மாகாண சபைத் தேர்தல்களைக் காலம் தள்ளிப்போடுவதற்கு வெவ்வேறு விதமான காரணங்களை கூறி வந்திருக்கின்றார்கள்.

கடைசியாக, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது தொடர்பாக முடிவெடுப்பதற்கென நாடாளுமன்றக் குழுவொன்றை நியமித்திருக்கின்றார்கள். இதுவும் குறிப்பிட்ட தேர்தல்களை மேலும் காலம் தள்ளிச் செல்வதற்கான அரசின் தந்திரமாகவே பார்க்க வேண்டி உள்ளது.

மாகாண ஆட்சி முறைமைக்கே எதிரான மக்கள் விடுதலை முன்னணியின் கடந்தகாலக் கொள்கையையே தேசிய மக்கள் சக்தி அரசு கடைப்பிடிப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

மக்களாட்சியைக் கொண்ட மாகாண ஆட்சிகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார அமைப்புகள் கால இடைவெளியின்றி தொடர்ச்சியாக நடைமுறையில் செயற்படுவது மிக அவசியமானதாகும். அவற்றுக்கான தேர்தல்கள் நடைபெறுவதை அரச ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்கள் தங்களது சுய அரசியல் ஆதாய நோக்கோடு தீர்மானிப்பது அதிகார துஸ்பிரயோகமே.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமையைக் கொண்ட மாகாண ஆட்சியானது

(1) இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து சிறுபான்மையின மக்களினதும் அடிப்படை நலன்களுக்கு மிக அவசியமானது என்பதையும்,

(2) இலங்கை போன்ற பல்தேசிய இனங்கள் வாழும் மற்றும் பல்வேறு வகைகளிலும் பன்முகத் தன்மை கொண்ட நாட்டின் மைய ஆட்சிக் கட்டமைப்பில் அதிகாரங்கள் அனைத்தும் குவிந்திருப்பது நாட்டின் ஜனநாயக செயன்முறைக்கும், மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் வாழ்வுரிமைகளுக்கு எப்போதும் ஆபத்தானதாகும் என்பதையும்,

(3) நாட்டின் அனைத்து மாகாண பிரதேசங்களும் குறிப்பிடத் தக்க அளவுக்கு உரிய பொருளாதார சமநிலையை எட்டுவதற்கான வளர்ச்சியை அடைவதற்கு அந்தந்த மாகாண மக்களுக்கு நெருக்கமான அரசியல் தலைமையைக் கொண்டவர்கள் நியாயமான அளவுக்கு சுயாதீனமான ஆட்சி அதிகாரத்தைக் கொண்டவர்களாக செயற்படுவதற்கான அரச கட்டமைப்பாக மாகாண ஆட்சி முறைமை தடையின்றி செயற்படுவது அவசியமாகும் என்பதையும்,

(4) இலங்கையின் அனைத்து தேசிய இன மக்களும் அவரது பாரம்பரிய சமூக வாழ்விடப் பிரதேசங்களில் அவரவரது கலாசார, பண்பாட்டு, வழிபாட்டு மற்றும் வரலாற்று ரீதியாக மரபார்ந்த விடயங்களைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் அடிப்படை உரிமைகள் கொண்டவர்களாவர். இவை தொடர்பான ஆக்கிரமிப்புகளையும் அத்துமீறல்களையும் தடுத்து நிறுத்தி, கடந்தகால தவறுகளை சரி செய்வது அரசின் கடமை என்தைனை வலியுறுத்தி, இந்த விடயங்களில் அரசை நோக்கி குரலெழுப்புவதற்கும், உரிய கோரிக்கைளை முன்வைப்பதற்கும், உரிய சட்ட நடவடிக்கைகளை உரிய காலத்தில் மேற்கொள்வதற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண ஆட்சிகளே சட்ட நியாயாதிக்கம் கொண்ட அரச கட்டமைப்பாக இருக்க முடியும் என்பதையும் எமது கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

எனவே, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விகிதாசார தேர்தல் முறைமையின் அடிப்படையில் உடனடியாக நடத்துவதற்கு வேண்டிய சட்டத்தை, கொழும்பு மைய மத்திய அரசு, குறிப்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா, உடனடியாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைச் செய்வதோடு, மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் காலதாமதங்களின்றி நடப்பதை உறுதி செய்தல் வேண்டும் என்பதையும், மேலும், மாகாண சபைகளுக்கு அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தும் முறையாகவும் முழுமையாகவும் அமுலாக்கப்படுவதற்கு வேண்டியனவற்றை காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும் என்பதையும் எமது கட்சி முதன்மையான கோரிக்கைகளாகக் கொண்டு செயற்படும்.

இவற்றுடன் தொடர்பான அரசில் கோரிக்கைகளையும் உரிய செயற்திட்டங்களையும் மேற்கொள்ளுகின்ற ஓர் அரசியல் இயக்கத்தை எமது கட்சி முன்னெடுக்கும் எனவும், அதற்குரிய வகையில் வேண்டிய அரசியல் மூலோபாய மற்றும் தந்திரோபாய செயற்றிட்டங்களை மேற்கொள்ளும் எனவும் 31.01. 2026 ஆமா திகதி கூடிய கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

மேலும், அதிகாரப் பகிர்வு, அபிவிருத்தி மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவை தொடர்பாக சட்டத்துறையினர், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், கல்லூரி ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய படைப்பாளிகள், அரசியல் பொருளாதார சிந்தனையாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் சமூகச் செயற்பாட்டாளர்கள் போன்றோரை இணைத்த ஒரு மக்கள் ஜனநாயக இயக்கத்தை முன்னெடுப்பதற்காக மாவட்டங்கள் தோறும் மக்கள் பேரவைகளை ஆக்கி ஊக்கமுடன் செயற்பட வைக்கும் வேலைத்திட்டத்தை கட்சி தீவிரப்படுத்தும் எனவும் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.”

- என்றுள்ளது.

### கெஹலியவின்...

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை ஈட்டியமை மற்றும் பண மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைவாக இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்து.

ஏற்கனவே கெஹலிய ரம்புக்வெலவின் மனைவி மற்றும் ஏனைய மகள்கள் மீதும் இதேபோன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது மூத்த மகள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய

# ஓய்வூதிய இரத்துச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரண் அல்ல!

## உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே, சாதாரண பெரும்பான்மையுடன் மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படும் என தேசிய மக்கள் சக்தி அரசு உறுதியளித்திருந்தது.

இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, அமைச்சரவை அனுமதியுடன் அதற்குரிய வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதன்பின்னர் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதற்கு எதிராக சிலர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த பின்னர், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இன்று காலை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

சட்டமூலத்தின் எந்த விதிகளும் அரசமைப்பு விதிகளை மீறவில்லை என்பதை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

# அவசரகாலச் சட்டம் நீடிப்பு: சஜித் அணி கடும் எதிர்ப்பு!

இலங்கையில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு எதிர்ப்பு வெளியிட்டார்.

அவசரகாலச் சட்டத்தை இந்த அரசு ஒடுக்குமுறைக்காகப் பயன்படுத்துகின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

எனவே, அந்தச் சட்டத்தை நீடிப்பதற்கு எதிராகவே வாக்களிக்கப்படும் எனவும்



அவர் கூறினார்.

ரஞ்சித் மத்தும பண்டாரவின் இந்தக் குற்றச்சாட்டைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நிராகரித்தார்.

அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பு விதிகளின் கீழ், ஜனாதிபதியால் ஒரு மாத காலத்துக்கு மட்டுமே அவசரகால நிலையை அறிவிக்க முடியும்.

அதனை நீடிக்க வேண்டுமெனில் அதற்குரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடப்பட்டு, நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

அதற்கமையவே நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு, இன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

### முன்னாள் அமைச்சின் செயலாளர்

# அனுஷ பெல்பிட்டவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை ஈட்டியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவை எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் சந்தேகநபர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த விடயங்களை பரிசீலித்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜே.வி.பியின் சிக்கல்

"தேசிய மக்கள் சக்தி அரசுக்குள் தனி நபர் ஆதிக்கம் இல்லை. உரிய வகையில் கலந்துரையாடிக் கூட்டுப் பொறுப்புடனேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றன."- இவ்வாறு இந்தியச் சுற்றுலாவுக்காகப் புதுடில்லிக்குப் புறப்பட முன்னர் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

"தேசிய மக்கள் சக்தி அரசைப் பெலவத்தையில் இருந்து நீங்கள் இயக்குவதாகக் கூறப்படுகின்றது. நீங்கள்தான் உத்தியோகபூர்வமற்ற ஜனாதிபதி என்ற விமர்சனமும் எதிரணியால் முன்வைக்கப்படுகின்றதே?" என்று ரில்வின் சில்வாவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர் "நான் உத்தியோகபூர்வமற்ற ஜனாதிபதி அல்லன். நான் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் மட்டுமே. நான் எவருக்கும் அழுத்தம் பிரயோகிப்பது கிடையாது. அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பது இல்லை. ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றின் தலைமையகம் பெலவத்தையில்தான் உள்ளது. ஆட்சி அமைப்பதற்கு முன்னரும் நாம் அங்கிருந்துதான் முடிவுகளை எடுப்போம். தற்போதும் அங்கிருந்து கலந்துரையாடுவோம். அமைச்சரவையில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் உரிய இடத்தில் எடுக்கப்படும். எமது கட்சித் தலைமையகத்தில் கருத்தாடல் இடம்பெறும்.

பல யோசனைகள் வரும். அவை பற்றி ஆராயப்பட்டுப் பெரும்பாலானோரின் தேர்வு ஏற்கப்படும். எனவே, பெலவத்தையில் கலந்துரையாடல் இடம்பெறும். ஆனால் பெலவத்தையில் இருந்து கொண்டு ஒருவர் இயக்குகின்றார் எனக் கூறப்படுவது தவறு. ஏனைய கட்சிகளைப் போல் தனிநபர் செல்வாக்கு செலுத்தும் கட்சி அல்ல எமது கட்சி. 'நாம்' என்ற சிந்தனை அடிப்படையிலேயே செயற்படுகின்றோம். எம்மிடையே கூட்டுப் பொறுப்பு உள்ளது. தனிநபர் ஆதிக்கம் செலுத்தும் கட்சிகளுக்கு எமது அரசியல் கலாசாரத்தைப் புரிந்து கொள்வது கடினம்." என்கிறார் அவர்.

ஆம். அவர் கூறுவது சரிதான். ஜே.வி.பி. கட்சியின் அரசியல் கலாசாரத்தை மக்கள் - பிறர் - புரிந்து கொள்வது கடினம்தான்.

பெலவத்தையில் - அவர்களது கட்சித் தலைமையகத்தில் - கலந்துரையாடல்கள் இடம் பெறுவதும் தீர்மானங்கள் எடுக்கப்படுவதும் தவறல்ல. ஆனால் அவை கட்சித் தீர்மானங்களாக இருக்க வேண்டும். அரசாங்கத்தின் தீர்மானங்களாக அமையக்கூடாது. அரசாங்கத்தின் தீர்மானங்கள் அரசாங்கத்துக்கு உரியவையாக இருக்க வேண்டும். கட்சி தலைமையகத்தில் எடுப்பவையாக அமையக்கூடாது.

நாட்டு மக்கள், நிறைவேற்றதிகாரத்தைப் பிரயோகிக்கும் தங்களின் இறைமையை இலங்கை அரசமைப்புபடி தங்களது வாக்குகள் மூலம் அநுரகுமார திஸநாயக்க என்ற தலைவரிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். மக்களிடம் அந்த இறைமையைப் பெற்றவரே அந்த இறைமையை - நிறைவேற்றதிகாரத்தை - பிரயோகிக்க வேண்டும். அதனை அவரை விடப் பிறிதான ஒரு கட்சித் தலைமையகம் தன்னுடைய தீர்மானமாக எடுத்து, அவர் மீது அழுத்தம் கொடுத்து, அவர் வாயிலாகப் பிரயோகிக்க முடியாது. பிரயோகிக்கக் கூடாது. அதுதான் இன்றைய பிரச்சினை.

அதுபோலவே அமைச்சரவை முடிவுகள் அமைச்சரவை கூட்டத்தில்தான் தீர்மானிக்கப்பட வேண்டும். பெலவத்தையில் அல்ல.

ஆனால், அதற்கு மாறாக அப்படிக் கட்சி தலைமையகத்தில் - பெலவத்தையில் - ஜனாதிபதியின் அதிகாரத்துக்கும் அமைச்சரவையின் அதிகாரத்துக்கும் உட்பட விடயங்கள் தீர்மானிக்கப்பட்டு, அவை ஜனாதிபதி மீதும் அமைச்சரவை மீதும் அழுத்தமாக பிரயோகிக்கப்படுவதுதான் மக்களின் இறைமையைல் பிரயோகிக்கும் விடயத்தில் முற்றிலும் தவறானது என்பது குறிப்பிடப்பட வேண்டும். ஜே.வி.பியின் அரசியல் கலாசாரம் புரிந்து கொள்வதற்குக் கஷ்டமானதுதான். ஆனால் அது அடிப்படை அரசியல் முறைமைகளுக்கு மாறானதாக - தவறானதாக - இருப்பதுதான் இங்கு பிரச்சினை.

# மடு பாலம்பிட்டி பிரதான வீதியில் உயிருக்கு போராடிவரும் யானை

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலம்பிட்டி பிரதான வீதிக்கு அருகில் காட்டு யானை ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் உயிருக்கு போராடி வருகிறது.

சுமார் 10 வயது மதிக்கத்தக்க யானை எழும்பி நடக்க முடியாத நிலையில் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று வியாழக்கிழமை இரவு இந்தப் பகுதிக்கு யானை கூட்டம் ஒன்று வந்தது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதி மக்கள் பொலிஸ் மற்றும் வனவள திணைக்கள அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த யானையை அந்தப் பகுதியூடாக செல்லும் மக்கள் பார்வையிட்டுச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.











# ஏழை மக்களுக்குத் துணை நிற்கும் பிரதேச செயலாளர் எமக்கு வேண்டும்

### அவரை மாற்ற வேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகப் போராட்டம்

**(சண்முகம் தவசீலன்)**

ஏழை மக்களுக்கு துணை நிற்கும் பிரதேச செயலாளர் எமக்கு வேண்டும் என்று தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் மற்றும் கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவுகளில் பாரிய அளவில் காணிகளை அடாத்தாகப் பிடித்தனர் என்று குறிப்பிட்டு 75 அங்கிருந்து வெளியேறுமாறு பிரதேச செயலகத்தால் 'அ' படிவம் ஒட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் 5 பேர் காணியில் இருந்து வெளியேறுவர் என்று அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஏனைய 70 பேருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பிரதேச செயலகத்தால் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த காணிகளைப் பிடித்தவர்கள் சிலர் 27.01.2026 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நடைபெற்றபோது மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஒன்று கூடி, பிரதேச செயலாளர் மற்றும் குறித்த பகுதி கிராம அலுவலர் ஆகியோருக்கு எதிராக போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போதும், அங்கு அடாத்தாகக் காணி பிடிக்கப்பட்டு உள்ளது என்று பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து உரிய வகையில் ஏற்கனவே அவர்களுக்கு காணி இருக்கும்போது ஏன் இன்னொரு காணியைப் பிடிக்கின்றார்கள் எனில் அதற்குரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த காணியை அடாத்தாகப் பிடித்தனர் என்று பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டவர்கள், பிரதேச செயலாளரை மாற்றுமாறும் கிராம அலுவலரை மாற்றுமாறும் கோஷங்கள் இட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த காணியற்ற மக்கள் மற்றும் சிவில் அமைப்புகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து நேற்று மாலை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நியாயமான முறையில் செயற்படும் பிரதேச செயலாளரை மாற்றக்கூடாது எனவும் அவர் எங்களுக்கு வேண்டும் எனவும் தொடர்ச்சியாக காணியாற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கு அவர் நியாயமான முறையிலே நடவடிக்கையை எடுக்கிறார் என்றும் அதனை செயல்படுத்த அவருக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவரை மாற்றம் செய்யக்கூடாது என்றும் இந்தப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் இறுதியில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினுடைய மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) திருமதி எஸ். மஞ்சுளாதேவி மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) எஸ்.ஜெயகாந்தன் ஆகியோரிடம் தங்களுடைய மகஜரை கையளித்து காணியற்றவர்களுக்கு காணி வழங்குமாறும் பிரதேச செயலாளர் மேற்கொள்ளும் நியாயமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் அடாத்தாக காணி பிடித்தவர்களின் செயற்பாடுகளுக்குத் துணை போக வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# மூதூர் பாரதி மகா வித்தி பரிசளிப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

மூதூர் பாரதி மகா வித்தியாலய பரிசளிப்பு விழா அதிபர் பு.ஜெயகாந்தன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரத்தில் பாடசாலையில் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்ற மாணவன் மற்றும் இந்தப் பாடசாலையில் உயர்தரம் ஆரம்பித்த முதல் வருடப் பெறுபேற்றில் பல்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவி ஆகியோருக்கான பாராட்டு நிகழ்வுடன் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெ.ஜெயந்தன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.










# மடுல்சீமை - பிட்டமாறுவ வீதியில் வீதியில் வீழ்ந்துள்ள மண்மேடுகள்!

**(நடராஜா மலர்வேந்தன்)**

மடுல்சீமை – பிட்டமாறுவவரை செல்கின்ற பிரதான வீதியில் குருவிக்கலயை அண்மித்த அம்பலம் சந்தி பகுதிகளில் மண்மேடு மற்றும் கற்பாறைகள் வீதியில் சரிந்து வீழ்ந்துள்ளமையால் இந்தப் பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, கடந்த இரண்டு நாள்களாக பதுளை மாவட்டத்தில் அடைமழை பெய்து வருகின்றமையால் அதிகரித்த குளிர்கால நிலையை உணரக் கூடியதாகவுள்ளது. இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் சிரமத்துக்கு மத்தியில் பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது மழையுடன் பனிமூட்டம் நிரம்பிக் காணப்படுவதால் வீதி வழுக்கும் தன்மை காணப்படுகிறது என்றும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறும் போக்குவரத்து பொலிஸாரால் வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.







# கிழக்கு ஆளுநர் தலைமையில் துறைசார் மதிப்பீட்டுக் கலந்தாய்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் துறை சார்ந்த மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டம் நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலை மாகாண கல்வி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் அமைச்சகமும் அமைச்சகத் துடன் இணைந்த நிறுவனங்களான மாகாண விளையாட்டுத் திணைக்களம், பண்பாட்டுத் திணைக்களம், மாகாண முன்பள்ளி பிரிவு ஆகியவற்றின் முன்னேற்ற நிலைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் குகநாதன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர், கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்கள பணிப்பாளர் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# குடிதண்ணீர் தாங்கி வழங்கல்!





(ஏ.எஸ்.எம்.அர்ஹம் நிருபர்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஏற்பாட்டிலும், வைடபிள்யூஎம்ஏ அமைப்பின் அனுசரணையுடன் சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலயத்தின் நீண்ட நாள் அத்தியாவசிய தேவையாக இருந்து வந்த குடி தண்ணீர் தாங்கி இன்று உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் நலன் மற்றும் சுகாதார தேவைகளைக் கருத்தில் கொண்டு, குடிதண்ணீர் தாங்கி ஒன்றை பெற்றுத் தருமாறு பாடசாலை நிர்வாகம் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவர் ரஹ்மத் மன்சூரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, குறுகிய காலத்துக்குள் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.





# எமது நாடு ஒரு விவசாய நாடாகையால் விவசாயத் துறையை மேம்படுத்துவோம்

## மன்னார் மேலதிக அரச அதிபர் பிரதீப்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

எமது நாடு ஒரு விவசாய நாடு என்ற வகையில் விவசாயத் துறையை நாம் மேம்படுத்த வேண்டும். எங்களால் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மாற்றம் செய் வேண்டும்.

மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எம்.பிரதீப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் ஏற்பட்ட டிட்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மேட்டு நிலப் பயிர் செய்கையாளர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதி உதவியுடன் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட 25 விவசாயிகளுக்கு தலா ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நெருக்கடி எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. எங்களால் உற்பத்தி செய்யக்



கூடிய பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. அவ்வாறில்லாமல் உற்பத்தித் துறையை நாம் மேம்படுத்த வேண்டும். அதனால் நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தை எட்ட முடியும்.

'நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு எமது பொருளாதாரம் மேம்பட வேண்டும். தனியே அரச நிறுவனங்களை அல்லது சேவை வழங்கும் நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதல்லாமல், எங்களுடைய நாடு ஒரு விவசாய நாடு என்ற வகையில் விவசாயத் துறையை மேம்படுத்த வேண்டும்.

நாட்டில் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நெருக்கடி எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. எங்களால் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அவ்வாறில்லாமல் உற்பத்தித் துறையை நாம் மேம்படுத்த வேண்டும். அதனால்தான் நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தை எட்ட முடியும்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பெருநிலப்பரப்பில் மாத்திரமில்லாமல் தீவுக்குள்ளும் தற்போது விவசாயிகள் பயிர் செய்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு யுஎன்டிபி மற்றும் எம்.ஏ. ஆர்.ஆர். போன்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் யுஎன்டிபி நிறுவனத்தால் உங்களுக்கு வழங்கப்படுகிறது. இதை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ள வேண்டும்.- என்றார்.

குறித்த நிகழ்வில் மன்னார் மேலதிக அரச அதிபர் எம் பிரதீப், திட்டமிடல் பணிப்பாளர் எச்.ஹலிம் தீன், மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் (எம்.ஏ.ஆர்.ஆர்) தலைவர் அருட்பணி ரி. நவரட்ணம், செயலாளர் ராதா பெனான்டோ, நிறுவனங்களின் திட்ட உத்தியோகத்தர் சிங்ளேயர் பீற்றர், வெளிக்கள உத்தியோகத்தர் ராஜ் குரூஸ், மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கி வைத்தனர்.





# ஆலையடியவேம்பு பிரதேச செயலக பொங்கல் நிகழ்வுகள் இன்று!

(வடிவேல் டினேஸ்)

அம்பாறை மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட ஆலையடியவேம்பு பிரதேச செயலகத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழா அக்கரைப்பற்று கருங்கொடித்தீவு பெரிய பிள்ளையார் ஆலய வளாகத்தில் இன்று காலை இடம்பெற்றது.

ஆலையடியவேம்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்கள் மற்றும் சமூக பொது அமைப்புக்களும் இணைந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலக பொங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

அக்கரைப்பற்று கருங்கொடித்தீவு பெரிய பிள்ளையார் ஆலய வளாகத்தில் சுமார் 50 வருடங்களுக்கு பின்னர் செய்கை மேற்கொள்ளப்பட்டு விளைந்த வேளாண்மையில் நெல் அறுவடை செய்யப்பட்ட தமிழர்களின் பண்டைய மரபுரிமையை காக்கும் முகமாக அறுவடை செய்யப்பட்ட நெற் கதிர்கள் மாட்டு வண்டியில் ஆலயத்தைச் சுற்றி சுற்றி சம்பிரதாய பூர்வமாக பறை ஓசையு முழங்க எடுத்து வரப்பட்டது. பின்னர் ஆலய முன்றலில் குவிக்கப்பட்டு தடியினால் உலர்த்தப்பட்டு, நெல் மணிகள் தூற்றப்பட்டு பின்னர் மர உரலில் உலர்த்தப்பட்ட நெல் குற்றப்பட்டு தமிழர்களின் பண்டைய சம்பிரதாயங்களுடன் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.



ஆலையடியவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பொங்கல் நிகழ்வில் ஆலயடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இந்து ஆலயங்கள் மற்றும் சமூக அமைப்புக்களும் பொங்கல் பொங்கினர்.

இதன் போது ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ், உதவி பிரதேச செயலாளர் எம்.இராமக்குட்டி, பிரதேச சபைத் தவிசாளர் ஆர்.தர்மதாச மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச ஆலய தலைவர்களும் சமூக அமைப்பினர் கலந்து கொண்டனர்.








# சக்கர நாற்காலி உதவியுடன் ஆரம்பமான பயணம் மன்னாரில் இன்று நிறைவானது

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கையில் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தும் மன்னாரில் இருந்து சக்கர நாற்காலியின் உதவியுடன் மாற்றாற்றல் கொண்ட இளைஞரான வவுனியா சூடுவந்த குளம் பகுதியை சேர்ந்த மக்கின் முகமது அலி கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்த பயணம் இன்று வெள்ளிக்கிழமை மன்னாரில் நிறைவு பெற்றுள்ளது.

வடமாகாண சக்கர நாற்காலி கிரிக்கெட் அணியின் தலைவரான மக்கின் முகமது அலி தொடர்ச்சியாக கடந்த காலங்களில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கை முழுவதும் சுமார் 1500 கிலோ மீற்றருக்கும் அதிகமான கடற்கரையோரமாக குறித்த பயணம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து இறுதியாக மன்னாருக்குத் தனது பயணத்தை மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை மீண்டும் மன்னாரை வந்தடைந்தார்.

அவருக்கு மன்னார் மக்கள், மாற்றுத் திறனாளிகள் அமைப்புகள் உள்ளடங்களாக பலர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக அருளுரையும் உதவித் திட்டம் வழங்கலும்






சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை மற்றும் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக, "கம்பராமாயணம் வாழ்வியல் கருத்துக்கள்" என்னும் ஆன்மீக அருளுரை இடம்பெற்றது.

ஓய்வுநிலை ஆசிரியர் இரா செல்வவடிவேல் அருளுரை நிகழ்த்தினார்.

உதவித் திட்டங்களாக, 2 லட்சத்து 44 ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான 05 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஏழாலை சைவம காஜன வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, தரம் - 06 இல் கல்வி கற்கும் 3 மாணவர்களுக்கும், தரம் -7, தரம் - 8 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

யாழ் நீரிழிவு கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக,

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஊசி மருந்து வழங்குவதற்காக ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மாணவர்களின் பயன்பாட்டுக்காக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான எழுது பொருள்கள் வழங்கப்பட்டன.

இன்று வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வுகள் இடம்பெற்றது.



# சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தின் 3 மாடி நவீன சந்தைக் கட்டடத் தொகுதி!

## அடிக்கல் நடும் நிகழ்வு இன்று

சாவகச்சேரி நகர சபையால் பொதுச் சந்தை வளாகத்தின் மேற்குப் பகுதியில் 118 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கவுள்ள மூன்றுமாடி நவீன சந்தைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

சபையின் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் எவ் .சீ.சத்தியசோதி, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் ந. காண்டீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காலத்தில் சந்தையின் மேற்குப் புறத்தில் 35 கடை அறைகளைக் கொண்ட கட்டடத் தொகுதி முழுமையாக சேதமடைந்தது.

தற்போது சபை நிதியில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்தின் முதல் தளத்தில் 23 கடை அறைகள் அமைக்கப்படவுள்ளன என தவிசாளர் தெரிவித்தார்.







# பிரதமர் மோடி பெப்ரவரி 28இல் மதுரையில் பிரசாரம் செய்கின்றார்



பிரதமர் மோடி எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் தமிழகம் வருகிறார். மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் பங்கேற்கும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில், மாநில அரசியல் சூழல் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகிறது. தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரமாக தயாராகி வரும் நிலையில், கூட்டணி அமைப்பது குறித்தபேச்சுவார்த்தைகளும் பரபரப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வர உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. அரசியல் மோதல்கள் தீவிரமாகி வரும் நிலையில், எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ள தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளார்.

இந்த பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி, பா.ம.க, த.மா.கா, அ.ம.மு.க. உள்ளிட்ட கூட்டணியில் இடம்பெற்றுள்ள அனைத்து முக்கிய கட்சி தலைவர்களும் ஒரே மேடையில் அணிவகுக்க உள்ளனர். மேலும், தேசிய ஜனநாயக கூட்டணியில் புதிதாக இணையும் வாய்ப்பு உள்ள சில கட்சிகளின் தலைவர்களும் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம் என பா.ஜ.க. நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# 1.5 கோடி ரூபா அபராதத்தை எதிர்த்து விஜய் தாக்கல் செய்த மனு தள்ளுபடி!

## சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு





வருமானத்தை மறைத்தார் என கூறி, ஒரு கோடி 50 லட்சம் இந்திய ரூபா அபராதம் விதிக்கப்பட்டமையை எதிர்த்து, நடிகர் விஜய் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடந்த 2015-16ஆம் நிதியாண்டுக்கான வருமான வரி கணக்கை நடிகர் விஜய் தாக்கல் செய்த போது, அந்த ஆண்டுக்கான வருமானமாக 35 கோடியே 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 இந்திய ரூபா பெற்றதாக குறிப்பிட்டிருந்தார்.

அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமான வரித் துறை, நடிகர் விஜய் வீட்டில் கடந்த 2015 ஆம் ஆண்டு நடத்திய வருமான வரி சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் ஒப்பிட்டு, புலி படத்திற்கு பெற்ற 15 கோடி ரூபா வருமானத்தை கணக்கில் காட்டவில்லை என கண்டறிந்தது.

வருமானத்தை மறைத்ததற்காக ஒரு கோடியே 50 லட்சம் ரூபா அபராதம் விதித்து கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்தது.

தனக்கு அபராதம் விதித்து வருமான வரித்துறை பிறப்பித்த உத்தரவை எதிர்த்து நடிகர் விஜய் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, விஜய் தரப்பில், சட்டப்படி அபராத உத்தரவை 2019 ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்பே பிறப்பித்திருக்க வேண்டும். ஆனால் ஆறு ஆண்டுகள் காலதாமதமாக 2022 ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், அதனை ரத்து செய்ய வேண்டுமென வாதிடப்பட்டது.

வருமான வரித்துறை தரப்பில், ஆஜரான வழக்கறிஞர் சீனிவாஸ், வருமான வரி மதிப்பீட்டை எதிர்த்த 'அப்பீல்' முடிந்த பின், 6 மாத கால அவகாசத்துக்குள்ளேயே அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வருமான வரிச்சட்டப்படி நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து சரிதான். விஜய் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி, வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார்.

இன்று இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி, வழக்கில் நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து, உரிய கால அவகாசத்துக்குள் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அபராதம் விதித்த உத்தரவில் எந்த சட்டவிரோதமும் இல்லை. எனவே இதில் நீதிமன்றம் தலையிட எந்த காரணமும் இல்லை எனக் கூறி, விஜய் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

அப்போது, மேல் முறையீடு செய்ய அனுமதி வழங்க வேண்டும் என விஜய் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்டு, அபராத உத்தரவை எதிர்த்து, வருமான வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல் முறையீடு செய்ய அனுமதியளித்த நீதிபதி, அபராதம் விதித்த உத்தரவு தாமதமாக பிறப்பிக்கப்பட்டது என்ற காரணத்தின் அடிப்படையில் மேல் முறையீடு செய்யக் கூடாது. மற்ற காரணங்களை கூறி மேல் முறையீடு செய்யலாம் என உத்தரவிட்டார்.

# தமிழக அரசு வாக்குறுதி அனைத்தையும் நிறைவேற்றி போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்



## ஜி.கே. வாசன் தெரிவிப்பு

தமிழக அரசு வாக்குறுதிகள் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றி போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைத்து தரப்பு மக்களுக்குமான அரசாக செயல்பட வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழக அரசு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், டாஸ்மாக் ஊழியர்கள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் நடத்தும் போராட்டத்தை கவனத்தில் கொள்ளாமல் ஆட்சி செய்வது முறையல்ல. திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என காத்திருந்தும் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருப்பதால் மாநிலத்தில் அவ்வப்போது ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடைபெறுகின்றன.


குறிப்பாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் போக்குவரத்துக்கழக ஊழியர்கள் போராட்டங்கள் நடத்தியும் உரிய தீர்வு எட்டப்படவில்லை. தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்களுக்கு பணிமேம்பாடு வழங்காததைக் கண்டித்து, சென்னையில் கண்களில் கறுப்புத் துணி கட்டி போராட்டம் நடைபெற்றது. தமிழக அரசு போராட்டத்தில் ஈடுபடுபவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி சுமூகத் தீர்வு காண வேண்டுமே தவிர போராட்டக்காரர்களை கைது செய்யும் அடக்கு முறை நியாயமில்லை. நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டாலும் அரசுப் பணிகள் பாதிக்கப்படுவதை தமிழக அரசு முக்கிய கவனத்தில் கொண்டு செயல்பட்டிருக்க வேண்டும்.

எனவே தமிழக அரசு வாக்குறுதிகள் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றி போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைத்து தரப்பு மக்களுக்குமான அரசாக செயல்பட வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியா – அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தால் பாகிஸ்தானில் கடும் அரசியல் அதிர்வலைகள்!





அமெரிக்காவுடன் இந்தியா அண்மையில் மேற்கொண்ட வர்த்தக ஒப்பந்தம் பாகிஸ்தானில் கடும் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவுடன் பல மாதங்களாக பாகிஸ்தான் நெருக்கம் காட்டியும், அதனால் எந்தப் பயனும் இல்லை. மரியாதையை விலைக்கு வாங்க முடியாது என்று இணையவாசிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் இராணுவ தலைமைத் தளபதி ஆசிம் முனீர் ஆகியோர் மேற்கொண்ட தீவிர முயற்சிகளுக்குப் பலனாக, பாகிஸ்தானுக்கு 19 சதவீத வரியை அமெரிக்கா நிர்ணயித்தது. ஆனால், பல மாதங்களாக ட்ரம்பின் அழுத்தங்களுக்குப் பணியாமல் உறுதியாக நின்ற இந்தியா 18 சதவீத வரியுடன் பாகிஸ்தானை விட சாதகமான ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியுடன் இருக்கும் புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்த ட்ரம்ப், இந்தியப் பொருள்களுக்கான வரி 18 சதவீதமாகக் குறைக்கப்படும் என்று அறிவித்தார். இது பாகிஸ்தானுக்கு விதிக்கப்பட்ட வரியை விட ஒரு சதவீதம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரம்பிற்கு நோபல் பரிசுக்கு பரிந்துரை, அமைதி வாரியத்துக்கு ஆதரவு என பாகிஸ்தான் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியாவை விட கூடுதல் வரிச்சுமையையே அந்த நாடு பெற்றுள்ளது. இந்த விவகாரத்தை தற்போது கையில் எடுத்துள்ள இணையவாசிகள் பாகிஸ்தான் அரசை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

அளவுக்கு அதிகமான பணிவைக் காட்டாமலேயே இந்தியா சிறந்த ஒப்பந்தத்தைப் பெற்றது எப்படி என்பது குறித்து அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இது தொடர்பாக சமூக வலைதளங்களில் பகிரப்படும் கருத்துக்கள் அந்நாட்டு அரசின் இயலாமையை சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளன.

சமூக வலைதளவாசி ஒருவர் கூறுகையில், ஹுஹவிற்பனையாளராக செயல்பட்ட பாகிஸ்தான் அரசின் வியூகம் தோற்றுவிட்டது. பலுசிஸ்தானின் கனிம வளங்களை அமெரிக்காவுக்கு நீங்கள் பெட்டி பெட்டியாகக் கொடுக்கலாம், ஆனால் மரியாதையை விலைக்கு வாங்க முடியாது." என்று தெரிவித்துள்ளார்.



# இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தினேன்

## மீண்டும் கூறுகின்றார் ட்ரம்ப்

கடந்த ஆண்டு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரை தான் நிறுத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் கூறியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கம்போடியா மற்றும் தாய்லாந்து, கொசோவோ மற்றும் செர்பியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் ஈரான், அர்மேனியா மற்றும் அசர்பைஜான் என கடந்த ஓராண்டில் நான் எட்டு போர்களை நிறுத்தி உள்ளேன்.

உலகில் சக்தி வாய்ந்த நாடு என்றால் அது அமெரிக்காதான். முதல் முறையாக நான் ஜனாதிபதியாக இருந்தபோது இராணுவத்தை கட்டமைத்தேன். இதில் அணு ஆயுதங்கள் உட்பட பல்வேறு நவீன ஆயுதங்களும் உள்ளடங்கும். இப்போது அதை மேலும் சக்தி வாய்ந்த இராணுவ படையாக கட்டமைத்துள்ளேன். இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட போர் கப்பலை விடவும் நூறு மடங்கு சக்திவாய்ந்த போர் கப்பல்கள் நம் வசம் உள்ளன.

இந்தியா-பாகிஸ்தான்,ரஷ்யா-உக்ரைன் மற்றும் இஸ்ரேல் – ஈரான் இடையிலான அணு ஆயுதப் போரை நான் நிறுத்தினேன்." என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு:

# அன்டனியோ குட்டரெஸ் இந்தியாவுக்குப் பாராட்டு!



டில்லியில் எதிர்வரும் 19, 20 ஆகிய திகதிகளில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சி மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. இதில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த உச்சி மாநாட்டுக்கு வருவதை ஐ.நா. சபை தலைவர் அன்டனியோ குட்டரெஸ் உறுதி செய்துள்ளார்.

இதுகுறித்து செய்தி நிறுவனத்துக்கு நேற்று அவர் அளித்த பேட்டியில்.

"செயற்கை நுண்ணறிவுத்துறை என்பது மிகவும் வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறையாகப் பார்க்கப்படுகிறது. இதனால் பல நன்மைகளும், தீமைகளும் உண்டு. சர்வதேச உறவுகளில் இன்று செயற்கை நுண்ணறிவு முக்கியமான விஷயமாகவும், பிரச்சினையாகவும், எதிர்கால சவால்களில் ஒன்றாகவும் உள்ளது.

இந்தத் துறையால் பல நிபுணர்கள் வேலையிழக்கும் அபாயம் உள்ளதாக கருதுகின்றனர். எனவே, இதுதொடர்பாக அனைத்து வகையான சூழ்நிலைகளிலும் உலக நாடுகள் ஒன்றிணைந்து அதைப் பற்றி விவாதிப்பது மிகவும் முக்கியம்.

இந்த உச்சிமாநாட்டில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்காக இந்தியாவை நான் பாராட்டுகிறேன். இந்த உச்சி மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக எழுந்துள்ள சவால்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

கனடா முரசு


பக்கங்கள் - 03

வெள்ளிக்கிழமை 06/02/2026

## கனடாவில் தட்டம்மை பரவல் குறித்து சர்வதேச சுகாதார அமைப்பு எச்சரிக்கை



C3



# பாரிய பாதீட்டுப் பற்றாக்குறையை கனடா அரசு எதிர்நோக்க நேரிடலாம்

## நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலர் அறிக்கை

கனடா பாரியளவில் பாதீட்டுப் பற்றாக்குறையை எதிர்நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2035 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதத்தை பாதுகாப்புத் துறைக்கு செலவிட, கனடாவின் பிரதமர் மார்க் கார்னி திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறு பாதுகாப்பு செலவுகள் உயர்த்தப்பட்டால் மத்திய அரசின் பாதீட்டு பற்றாக் குறையை 63 பில்லியன் டொலராக உயர்த்தும் என நாடாளுமன்ற செலவுக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

C2

# டொராண்டோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் பலி







டொராண்டோவின் ஸ்கார்பரோ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், சிறுவன் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் மாலை, லாரன்ஸ் அவென்யூ ஈஸ்ட் மற்றும் பெல்லமி ரோட் நார்த் சந்திப்புக்கு அருகிலுள்ள கடையில் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் சிறுவன் மீட்கப்பட்டார் என டொராண்டோ பொலிஸ் பரிசோதகர் எர்ரோல் வாட்சன் தெரிவித்துள்ளார்.

டொராண்டோ அவசர மருத்துவ சேவையினரின் தகவலின்படி,

C2




# டொராண்டோ வீட்டுச் சந்தை தொடர்ந்து மந்த நிலையில்

2026 ஆம் ஆண்டின் முதல் பாதி முழுவதும் வீட்டு விலை மற்றும் விற்பனை மந்த நிலையில் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக டொராண்டோ பிராந்திய வீட்டுமனை சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீட்டு விற்பனை 19.3 சதவீதம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதே நேரத்தில், சராசரி விற்பனை விலை 6.5 சதவீதம் குறைந்து, 9,73,289 டொலர்களாக பதிவாகியுள்ளது.

ஜனவரி மாதத்தில் மொத்தமாக 3,082 வீடுகள் மட்டுமே விற்பனையாகியுள்ளன.

வீட்டு வழங்கல் அதிகரித்து வருவதால், 2026 முதல் பாதியில் சராசரி வீட்டு விலைகள் மேலும் குறைய வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது.

இருப்பினும், நுகர்வோர் நம்பிக்கை மேம்பட்டால், ஆண்டின் இரண்டாம் பாதியில் விலைகள் நிலைபெற வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

---

### டொராண்டோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த சிறுவன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால், சிறிது நேரத்தில் அவர் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டது. உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை வெளியிடப்படவில்லை. அவரின் சரியான வயதையும் பொலிஸார் தெரிவிக்க மறுத்துள்ளனர்.

சம்பவத்தின் போது கடையில் இருந்த ஊழியர்கள் அல்லது வாடிக்கையாளர்களுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என்றும் வாட்சன் கூறினார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, கொலை விசாரணைப் பிரிவு விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேக நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் தற்போது அவரைப் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டிற்கு வழிவகுத்த காரணங்கள் இதுவரை தெரியவரவில்லை.

சம்பவ நேரத்தில் அந்த கடை மிகுந்த நெரிசலுடன் இருந்ததா என்பது பற்றியும் உறுதியான தகவல் இல்லை என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் பொலிஸையோ அல்லது க்ரைம் ஸ்டாப்பர்ஸை தெரியாமல் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

---

### பாரிய பாதீட்டு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற வரவு – செலவுத் திட்ட அலுவலர் ஜேசன் ஜாக்ஸ் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

புதிய இலக்கை அடைவதற்காக பாதுகாப்புச் செலவுகளை படிப்படியாக உயர்த்துவது, ஆண்டுக்கு கூடுதலாக சுமார் 33.5 பில்லியன் டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அழுத்தத்தின்பேரில், நேட்டோ உறுப்புநாடுகள் இராணுவச் செலவுகளை அதிகரிக்க ஒப்புக் கொண்டன.

குறிப்பாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதம் என்ற புதிய உயர்ந்த இலக்கை ஏற்றுக் கொண்டன.

கார்னி அரசின் முதல் மத்திய வரவு–செலவுத் திட்டம் கடந்த இலையுதிர் காலத்தில் வெளியிடப்பட்டபோது, “புதிய நேட்டோ செலவுத் இலக்கை அடைவதற்கான பாதையில் கனடாவை கொண்டு செல்லும்.” என உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

எனினும், அந்த இலக்கை எவ்வாறு அடைவது என்பதற்கான கணிப்புகளுக்கு ஆதாரமான தரவுகளை அரசு வெளியிடவில்லை என ஜாக்ஸ் தனது அறிக்கையில் விமர்சித்துள்ளார்.

அடுத்த ஒரு தசாப்த காலத்தில் பாதுகாப்புச் செலவுகளை அதிகரிப்பது, 2035 ஆம் ஆண்டில் கனடாவின் மத்திய அரசின் கடன் மொத்த தேசிய உற்பத்தி விகிதத்தை 6.3 சதவீத புள்ளிகளால் உயர்த்தும் அபாயம் உள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் தட்டம்மை பரவல் குறித்து சர்வதேச சுகாதார அமைப்பு எச்சரிக்கை

உலகளவில் தட்டம்மை நோய் சம்பவங்களும் பரவலும் அதிகரித்து வரும் நிலையில், கனடா உள்ளிட்ட பல நாடுகள் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என சர்வதேச சுகாதார அமைப்பு ஒன்று வலியுறுத்தியுள்ளது.

பான் அமெரிக்கன் ஹெல்த் நிறுவனம் வெளியிட்டுள்ள தொற்றுநோய் எச்சரிக்கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வட மற்றும் தென் அமெரிக்க நாடுகள் தட்டம்மை நோய்க்கான தடுப்பூசி வழங்கல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

கனடாவில் கடந்த ஆண்டு மொத்தமாக 5,436 தட்டம்மை நோய் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஜனவரி மாதத்தின் முதல் மூன்று வாரங்களிலேயே 67 உறுதிப்படுத்தப்பட்ட தட்டம்மை நோய் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

2025ஆம் ஆண்டில், கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தட்டம்மை நோய் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்துள்ள நிலையில், அதே போக்கு 2026 ஆம் ஆண்டிலும் தொடரும் அறிகுறிகள் காணப்படுகின்றன என பான் அமெரிக்கன் ஹெல்த் நிறுவனம் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்ட 13 நாடுகளில் மொத்தமாக 14,891 உறுதிப்படுத்தப்பட்ட தட்டம்மை நோய் சம்பவங்களும், 29 மரணங்களும் பதிவாகியுள்ளன என பான் அமெரிக்கன் ஹெல்த் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 32 மடங்கு அதிகரிப்பு என கூறப்பட்டுள்ளது.

# கனடிய இளைஞருக்கு எதிராக பயங்கரவாத குற்றச்சாட்டு பதிவு



கனடாவில் இளைஞர் ஒருவருக்கு எதிராக பயங்கரவாத குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கனடாவின் கியூபெக் நகரப் பகுதியில் வசிக்கும் ஒரு இளைஞர், சமூக ஊடகங்களில் நாசி அமைப்புடன் தொடர்புடைய “வன்முறை சித்தாந்தத்தை” பிரசாரம் செய்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்த இளைஞர் ‘அடம் வாஃபென் டிவிஷன்’ எனப்படும் நியோ-நாசி அமைப்பால் ஊக்கமளிக்கப்பட்ட, குறைந்த கவன ஈர்ப்புடன் இயங்கும் இணையதளத்தை பிரசாரம் செய்தமை கண்டறியப்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அமைப்பு ‘நேஷனல் சோஷலிஸ்ட் ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட்’ என்ற பெயரிலும் அறியப்படுகிறது.

பொலிஸ் பேச்சாளர் சர்ஜென்ட் எரிக் காஸே குறிப்பிடுகையில்,

இந்த விசாரணை 2024 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது எனவும் தேவையான ஆதாரங்கள் கிடைத்ததையடுத்து, இந்த வாரம் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞர், இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாக உள்ளார்.